சம்பள விகிதங்கள் மாற்றி அமைத்து இருக்க வேண்டும் ஆகவே, உடனடியாக ஒரு மாத காலத்திற்குள் அந்தச் சங்கங்களை அழைத்துப் பேசி முடிவுக்கு வருமா ?

இரண்டாவதாக, அந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்தில், அந்தச் சங்கங்களுக்கு எந்த யூனியனுக்கும் ரெகக்னிஷன் இல்லாததால், மின்சார வாரியமே ரெகக்னிஷன் கொடுத்து, அந்தச் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தியது. இப்போது ஏற்கனவே இருந்த சங்கங்களைத் தவிர புதிதாகச் சங்கங்கள் ஏற்பட்டு உள்ளன. உறுப்பினர்கள் அதிகமாக இருக்கும் சங்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அப்படிப்பட்ட சங்கங்களையும் அழைத்து நம்முடைய அரசாங்கம், வாரியம் பேச்சு வார்த்தை நடத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1—12—74-ல் ஏற்கனவே இருந்த சம்பள விகிதம், பேச்சுவார்த்தை முடிந்து, உயர்த்தி இருக்க வேண்டும். அதற்காக 'வேஜ் ரிவிஷன் குழு' என்று அமைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1 மாத காலத்திற்குள் முடித்து விடவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், ரெகக்னைஸ்டு சங்கங்களோடு அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார்கள். மற்ற சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தவும் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி எழுந்தார்)

MR. DEPUTY SPEAKER : That is not allowed.

திரு. நா. வீராசாமி : ஒரே நேரத்தில் எத்தனைக் கேள்விகள் கேட்க முடியும் ? அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கிறது என்றால், ஆப்-அவர் டிஸ்கஷன், ஒன்-அவர் டிஸ்கஷன் வேண்டுமென்று சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி : சார், ஒரு கிளாரிபிகேஷன். . . ?

MR. DEPUTY SPEAKER : You are not allowed to speak.

5. தீர்மானம்

உறுப்பினர் திரு. ஓ. என். சுந்தரம் அவர்களுக்கு விடுப்பு கொடுப்பது பற்றி

THIRU R. PONNAPPA NADAR : Sir, under rule 15 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move—

> 'That leave of absence be granted by this House to Thiru O. N. Sundaram, M.L.A., for a period of sixty days from 28-8-1974.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

திரு. நா. வீராசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது முடியட்டும்.

6. அரசினர் சட்ட முன் வடிவு

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டுதல்) இரண்டாம் திருத்த சட்ட முடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(திரு. நா. வீராசாமி நின்றுகொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வீராசாமி, உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன?

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இது ரொம்ப சீரியஸ்ஸான மேட்டர். மற்றவர்களுக்கு எல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், இந்த மாதிரி லெங்க்தி ஸ்டேட்மெண்டாக இருந்தால் 2 நாட்களுக்கு முன்னால் வைத்து விடுவது நல்லது. காலையில் கொடுத்துவிட்டு, உடனே எடுத்துக்கொண்டு விட்டால், நேரம் கொடுக்கவில்லை என்று குறை கூறுகிறார்கள். ஆகவே, லெங்க்தி ஸ்டேட்மெண்டாக இருந்தால், இரண்டு நாட்களுக்கு முன்னால் வையுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் மாண்புமிகு தலைவரின் அனுமதியைக் கேட்டேன். படிக்கட்டுமா என்று கேட்டேன். 5-6 பக்கம் இருப்பதால், காலம் விரயம் ஆகுமே என்ற காரணத்தால் கேட்டேன். மாண்புமிகு தலைவர் அனுமதி கொடுத்ததால்தான், படிக்கவில்லை. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டேன். இல்லையென்றால் படித்து இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்னுடைய அனுமதி பெற்றுதான் செய்தீர்கள். பெரிய ஸ்டேட்மெண்டாக இருந்தால், இரண்டு நாட்களுக்கு முன்னால் சர்க்குலேட் செய்யுங்கள். அதற்குப்பிறகு எடுத்துக்கொண்டால், டிஸ்கஸ் செய்வதற்கு வசதியாக இருக்கும்.

திரு. நா. வீராசாமி: பெரிய ஸ்டேட்மெண்டாக இருக்கிறது, அதிலே சில விளக்கங்களும் கேட்க வேண்டியிருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ரூல் — 41 கொடுத்தவருக்கு ஒரு கேள்வி கேட்க அனுமதி அளிக்கிறபோது, பாராளுமன்றத்தில் கூட, ஒரு கேள்வியில் எ, பி, சி, டி என்று உப கேள்வி போட்டுக் கேட்டு விடுவார்கள். அந்த வகையில் கேட்டு இருக்கலாம். இன்று கேட்கவில்லையென்றாலும், எதிர்காலத்தில் அவர் அப்படிக் கேட்கலாம்.

1975 ஏப்ரல் 5]

திரு. நா. வீராசாமி: எனக்குக் கேள்வி கேட்பது எப்படி என்று திரு. கிருஷ்ணமூர்த்தி சொல்லவேண்டாம் அமைச்சர் அவர்கள் புரிந்து கொண்டு பதில் அளிக்க வேண்டும். இதிலே முக்கியமான பிரச்னை என்னவென்றால், அறிக்கையில் சில குறிப்புகள் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் குறிப்பில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "வேஜ் கைய்ட்லைன்ஸ் கமிட்டி".

MR. DEPUTY SPEAKER : I have passed over to the next subject. உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி: 6 பக்கம் அறிக்கையைப் படித்து விட்டு, கேள்வி போட வேண்டும் என்றால், ஒரு கேள்வி தான் அனுமதி கொடுத்தீர்கள். ரூல் 41-ன் கீழ் இது கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான விஷயம் ஆகும். இப்படிக் கேள்வி கேட்க அனுமதிக்காமல் செல்வது நியாயமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தப் பிரச்னையைவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குச் சென்றாகி விட்டது. மாண்புமிகு உறுப்பினர் கோருகிற விஷயங்களைப் பெறவேண்டு மென்றால், குறுகிய கால கேள்வி போடலாம். குறுகிய கால கேள்வி என்று வருகிறபோது, வருகின்ற நாட்களில் அமைச்சர் பதில் அளிப்பார்கள்.

7. 1975-76-ம் ஆண்டு நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு— தொடர்ச்சி

நிதிக்கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 28 — சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,00,09,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".